செ.வெ.எண்:61 /அக்டோபர்/2020 நாள்:15.10.2020

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் 100 விழுக்காடு கழிவறைகள் மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். மாநகராட்சியில் திறந்தவெளி கழிப்பிடம் முற்றிலும் இல்லை. இதன் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் கடிதம் அல்லது Commr.trichy@tn.gov.in என்ற மின்னஞ்சல் வாயிலாக தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------------

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் வசிக்கும் அனைத்து மக்களும் 100 விழுக்காடு கழிவறைகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர் என்றும், திறந்தவெளிகளை கழிப்பிடமாக பயன்படுத்துவதில்லை என்றும், தூய்மை இந்தியா திட்டம் 2021ல் இம் மாநகராட்சியில் திறந்தவெளி கழிப்பிடம் முற்றிலும் இல்லை (ழுனுகூ) என்ற அறிவிப்பு வெளியிடுவதற்கான நெறிமுறைகளின் படி, தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண் 457 நாள் 09.10.2020ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மேலும் ஒருபடியாக, தூய்மை இந்திய கணக்கெடுப்பு 2021ன் நெறிமுறைகளின்படி, திறந்தவெளி கழிப்பிடங்கள் அற்ற நிலை என்ற தகுதி பெற பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அதனை 15 தினங்களுக்குள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் அல்லது Commr.trichy@tn.gov.in என்ற மின்னஞ்சல் வாயிலாக தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ,ஆப.., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**